காலாண்டுத் தேர்வு - 2024 | தேர்வு எண்

காலம் : 3.00 மணி | **XII - தமிழ்** | மதிப்பெண் : 90

பகுதி -1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. (14x1=14)
2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பெருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. முதல்கல் என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) பூமணி ஆ) பாரதியார்
இ) உத்தமச்சோழன் ஈ) தோப்பில் முகமது மீரான்

3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன, அவை ________
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்

4. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம்
இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

7. ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) குஜராத்
இ) பஞ்சாப் ஈ) ஆந்திரா

8. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

9. "வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" - எனப் புகழ்ந்து பாடியவர்
அ) பாரதியார் ஆ) கம்பர்
இ) பாரதிதாசன் ஈ) கவிமணி

10. மலரடி - என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) உவமைத் தொகை ஆ) உருவகம்
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

11. நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர்
அ) கபிலர் ஆ) ஔவையார்
இ) வெள்ளிவீதியார் ஈ) அம்மூவனார்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல்

இ) காட்சி ஈ) ஒலி

13. *பொருத்துக.*

i) தமிழ் அழகியல் - 1) பரலி.சு.நெல்லையப்பர்

ii) நிலவுப் பூ - 2) தி.சு.நடராசன்

iii) உய்யும் வழி - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

iv) கிடை - 4) கி.ராஜநாராயணன்

அ) 4 3 2 1

ஆ) 1 4 2 3

இ) 2 3 4 1

ஈ) 2 3 1 4

14. தமிழில் திணைப்பாகுபாடு அடிப்படையில் ———— பகுக்கப்பட்டுள்ளது

அ) பொருட்குறிப்பு ஆ) தொடர்க்குறிப்பு

இ) சொற்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

## பகுதி -2 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக.

16. அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

17. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

18. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.

20. முறைவைப்பு - விளக்குக.

21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
அலை, அளை, அழை

24. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*
கோவில்

25. *பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடரமைத்து எழுதுக.*
போட்டி வெற்றி பெற்றது கலைச் செல்வி பாராட்டுகள் குவிந்தன

26. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
அ) விளங்கி
ஆ) பொலிந்தான்



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***
அ) இனநிரை
ஆ) அருங்கானம்

28. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

29. ***வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.***
ஆண் மைய சமூகத்தில் பெண் திருமணத்திற்கு பின் தன் கணவனுடையத் தந்தையகத்தில் வாழ வேண்டும்.

30. ***கலைச்சொல்லாக்கம் தருக.***
அ) Tips
ஆ) Fiction

***குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.***
'பாடு' - என்னும் வேர்ச்சொல்லை பெயரெச்சமாக மாற்றுக.

**பகுதி-3 (பிரிவு - 1)**

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

31. 'சினத்தால் வரும் கேட்டினைக்' கூறுக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

**பிரிவு - 2**

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

37. 'மணந்தகம்' - விளக்குக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

**பிரிவு - 3**

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x4=12)***

39. அ) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.
***(அல்லது)***
ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.
***(அல்லது)***
ஆ) கூதிர்ப்பாசறை துறையைச் சான்றுடன் விளக்குக.

41. ***கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைத்து எழுதுக.***
அ) முன்
ஆ) விட்டான்



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42. ***இலக்கிய நயம் பாராட்டுக.***

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்கனம் வந்ததடா தம்பி வீரா!

-பாரதியார்

43. ***கீழ்க்காணும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.***

1) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

2) யானைக்கும் அடி சறுக்கும்

## பகுதி - IV

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.*** ***(3x6=18)***

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை பாடப்பகுதி வழி நிறுவுக.

***(அல்லது)***

ஆ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

***(அல்லது)***

ஆ) பண்டையக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

***(அல்லது)***

ஆ) "உரிமைத்தாகம்" கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** ***(4+2=6)***

அ) "ஒருமையுடன்...." - எனத் தொடங்கும் தெய்வமணிமாலைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "..... படும்" - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com